திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு



ஸ்ரீராமா! ஜெய ராமா!! ஜெய ஜெய ராமா!!!



பிரம்மோத்ஸவத்தில் சிறார் கலைஞர்கள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

"ஸப்தகிரி" இலவச இணைப்பு






## ஏப்ரல் 2020



மலர்–01

இதழ்–02


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| **இந்துக்கடவுள்கள் : ஸ்ரீராமபக்தன் அனுமான்**<br>- *திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி, கேரளா.* | 04 |
| **பன்னிரு ஆழ்வார்கள் : பொய்கை ஆழ்வார்**<br>- *பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 06 |
| **கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீபாதராஜர்**<br>- *திருமதி ஆ. அருணா, திருப்பதி.* | 08 |
| **சித்திரக்கதை : கடப்பாறை செய்த காயம்**<br>*கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.*<br>*தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.*<br>*சித்திரம் : திரு. டி. துவாரக நாத்.* | 10 |
| **நீதிக்கதைகள் : ஈகை**<br>- *திரு. சத்யதாரா, சென்னை.* | 14 |
| **சிறந்த சிறுவன் : செல்வன் இ. சாயி யசஸ்வி** | 16 |
| **புதிர் : வினா–விடை**<br>- *திரு. டி.பூபதிராவ், காஞ்சிபுரம்.* | 17 |
| **சித்திரம் வரைதல்** | 18 |


முன்னட்டை : **ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி**

பின்னட்டை : **ஸ்ரீராமபக்தன் அனுமன்**



இந்துக் கடவுள்கள்

# இராமபக்த அனுமான்

திருமதி டி.எஸ். ராஜலஷ்மி,
கேரளா.

இராமபக்தி என்றால் அனுமனைத் தவிர வேறு எவரையும் நாம் நினைத்து பார்க்க முடியாது. இராம நாமத்தை தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். இராம கைங்கர்யம் என்பதை உலகுக்கு காண்பித்தவர். இராம நாமத்தின் மகிமையையும் சக்தியையும் நிரூபித்தவர்.

இராமாயணத்தில் சிறந்த காண்டமாக சுந்தரக் காண்டத்தை கூறுவார்கள். எல்லாவித துன்பத்தையும் நீக்குவதற்கு "சுந்தர காண்டம்" வாசிப்பதோ அல்லது கேட்பதோ சாலச் சிறந்தது. ஏன் அவ்வாறு?

இராமாயணத்தின் நாயகனாக இராமபிரானும் சீதா பிராட்டி நாயகியாகவும் இருந்தாலும் கூட அனுமனுக்கு ஒரு சிறப்பு இடத்தை வால்மீகி கொடுத்துள்ளார். ஏனெனில் அவர் ஒரு இராம பக்தர் ஆவார். "சுந்தர" என்ற நாமம் அனுமனைக் குறிக்கும்.

சீதாபிராட்டியின் துயரத்தைப் போக்கி ஆனந்தத்தை கொடுத்தவர். லட்சுமனனுக்கு இந்திரஜித்தால் ஆபத்து வந்தபோது, இமய மலைக்குச் சென்று சஞ்சீவினி மூலிகையை கொண்டு வந்து உயிர்ப்பித்தார். இதைக் கண்டவுடன் இராமபிரான் மிக ஆனந்தப் பட்டார்.

யுத்த களத்தில் இராமபிரானுக்கு எவ்வித ரதமும் இல்லாத போது அவர் தன் தோளின் மீது ஸ்ரீராமனைத் தூக்கி போரிட்டார்.

இராமபிரான் தன் மோதிரத்தை அடையாளமாக அனுமனிடம் கொடுத்ததற்குக் காரணம் அவரே சிறந்த பக்தரென்பதால், அவர் திரும்பி சீதையின் சூடாமணியை இராமனுக்கு காட்டியபோது

இராமன் பேரின்பத்துடன் அனுமனை ஆரகட்டி அணைத்துக் கொண்டார். இது உலகிலேயே எந்த பக்தனுக்கும் கிடைக்காத அங்கீகாரம். ஏனெனில் பரம்பொருளே, ஜீவாத்மாவை ஆனந்தத்துடன் அங்கீகாரம் செய்தார்.

ஸ்ரீராம பட்டாபிஷேகத்தில் எல்லோர்க்கும் இராமபிரான் பரிசளித்தார். அனுமனுக்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்டார். அனுமனோ ஒன்றும் வேண்டாம் என்றார். ஆனால் சீதா தேவி தன் கழுத்தில் இருந்த ஒரு விலை உயர்ந்த முத்து மாலையைப் பரிசாகக் கொடுத்தார். அனுமன் மிக பக்தியுடன் வாங்கி ஒவ்வொரு முத்துக்களையும் உடைத்தார். பின்னே உற்று நோக்கி கீழே போட்டு விட் டார். அச்சபையில் ஒருவர், ஏன் இராமன் உன் உடம்பில் இருக்கின்றானா? உன் உடம்பில் இல்லை யென்றால் உன் உடம்பை என்ன செய்வாய்? என்று கேட்டார். அதற்கு அனுமன் தன் மார்பை கிழித்து, அதனுள் உள்ள இதயத்தில் ஸ்ரீராமர் சீதையின் உருவத்தைக் காண்பித்தார். சபையில் இருந்த எல்லோரும் இதனைக் கண்டு இராம பக்தியில் சிறந்தவன் அனுமனே ஆவார் என்றார்கள். இராமபிரான் அனுமனுக்கு “சிரஞ்சீவி” என்ற சாகாவரத்தை அளித்தார்.



ஒரு நாள் அனுமன் சீதையைக் காணச் சென்றார். சீதை குளித்து விட்டு “சிந்தூரத்தை” தன் நெற்றியில் இட்டுக் கொண்டாள். ஏன்? என்று அனுமன் வினவினான். அதற்கு சீதை இராமனின் நீண்ட ஆயுளை வேண்டி என்று கூறினாள். இதைக் கேட்ட அனுமன், தன் உடல் முழுவதும் சிந்தூரம் பூசியதாகவும் கூறினார். இராமன் மெய் சிலிர்த்து அனுமனுக்கு ஆசிர்வதித்தார். யவர் ஒருவன் செவ்வாய் தினத்தன்று அனுமனுக்கு சிந்தூரம் சாத்துகின்றானோ அவனுக்கு ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம் எல்லாம் கிட்டும் என்று ஆசிர்வதித்தார். அதுவே பக்தர்களின் பிரார்த்தனையுமாகும்.

அன்புக் குழந்தைச் செல்வங்களே! உங்களுக்கு ஆழ்வார்களின் கதையைக் கூறப் போகிறேன். விஷ்ணு பகவானை முழு முதல் கடவுளாய்க் கொண்டவர்கள் வைணவர்கள். அவர்கள் பின்பற்றும் நெறி வைணவ நெறி. அந்த வைணவ நெறியை உலகம் எல்லாம் வளர்த்தவர்கள் ஆழ்வார்கள்.

அவர் காஞ்சிபுரத்தில் திருவெஃகா திருத்தலத்தில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலுக்கு அருகாமையில் உள்ள குளத்தில் (பொய்கையில்) அவத ரித்தார். இவர் பொய்கையில் அவதரித்ததால் பொய்கை ஆழ்வார் என்று பெயர் பெற்றார். இவர் இயற்பெயர் யாருக் கும் தெரியாது. ஐப்பசி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் அவதாரம் செய்தார். இவர்தான் முதன் முதலில் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்னும் 4000 பாசுரங்கள் அடங்கிய நூலைப் பாடித் தொடங்கி வைத்தவர்.

இவர் பகவானைப் பற்றி அந்தாதியாக நூறு பாடல் களைப் பாடினார். இந்த அந்தாதி முதல் திருவந்தாதி என்று போற்றப்படுகின்றது. இவர் திருமாலின் திருக்கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றான பாஞ்சசன்யம் என்னும் சங்கின் அம்சமாகப் பிறந்தவர். ஒரு செயலைத் தொடங்குவ தற்கு முன்னர் மங்களகரமான வாத்தியத்தை இசைப்பது வழக்கம். அதைப் போலவே ஆழ்வார்களுடைய தொடக்கத் தைக் குறிப்பதற்காக இவர் சங்கின் அம்சமாக அவதரித்தார்.

இவர் நம்மைப் போல் பிறவாமல் எம்பெருமானின் அருளால் தோன்றியவர். தாய் வயிற்றில் பிறவாதவர் (அயோ நிஜர்) என்ற பெருமையும் இவருக்கு உண்டு.



## பொய்கை ஆழ்வார்

இறைவனின் குணங்களில் ஆழ்ந்திருப்பவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் தங்களுடைய தமிழ் பாசுரங்களால் திருமாலின் சிறப்புகளையும், பெருமைகளையும் போற்றிப் பாடினர். இவர்களைப் பற்றி அறிமுகப் படுத்துவதே "பன்னிரு ஆழ்வார்கள்" தொடரின் சிறப்பு அம்சமாகும்.

இவரோடு பேயாழ்வார், பூதத்தாழ்வார் என்ற இருவரும் சமகாலத்தவர்கள் என்பதால் இவர்கள் மூவரையும் சேர்த்து முதலாழ்வார்கள் என்று சொல்வார்கள். இவர்கள் யோகிகளை போல ஒரு நாளைக்கு ஒரு ஊரில் இல்லாமல் பல ஊர்களுக்குச் சென்று அங்குள்ள பகவானைப் பாடிக் காலம் கழித்தவர்கள்.

ஒரு சமயம், நல்ல மழைக்காலம், திருக்கோவிலூர் என்கிற திருத்தலத்திற்கு பொய்கை ஆழ்வார் சென்றார். தங்குவதற்காக மிருகண்டு முனிவர் என்பவர் ஆசிரமத்துக்குச் சென்றார். அப்பொழுது அங்கு பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும் கூட வந்து சேர்ந்தனர்.

இவர்கள் மூவரும் அன்றைய நாள் இரவில் ஒன்றாகத் தங்கி இருந்த பொழுது, பகவான் சங்கு சக்கரத்துடன் ஸ்ரீதேவி தாயாருடன் காட்சி தந்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் பாசுரங்களைப் பாடி இறைவ னுக்கு அர்ப்பணித்தனர். இவர் பாடிய முதல் பாடல் மிக அருமை யானது.

*''வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய*
*சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடர் ஆழி நீங்குகவே என்று''*

இதன் பொருள் : உலகத்தை ஒரு அகல் விளக்காகவும், உலகத் தைச் சுற்றியுள்ள சமுத்திரத்தை எண்ணையாகவும், உலகுக்கு வெளிச் சத்தைத் தருகின்ற சூரியனை விளக்காகவும் கொண்டு, எம்பெரு மானின் திருவடிகளுக்கு வாழ்த்துச் சொன்னார். உலகத்தவர்கள் துன்பம் தீர வேண்டும் என்பதற்காகவே, தமிழினால் பாசுரங்களைப் பாடி பகவானுக்கு மாலையாகச் சூட்டினார்.

இந்த பாசுரத்தைத் திரும்பத் திரும்பப் பாடி மகிழ்ந்து, எம்பெருமா னின் திருவருளுக்கும், ஆழ்வாரின் கருணைக்கும் இலக்காகுவோம்.

**- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி.**



# ஸ்ரீபாதராஜர்

குழந்தைகளே! நீங்கள் “பாரோ மனகெ கோவிந்த...” “கங்களித்தா தகோ...”, “பூஷணகே பூஷண” என்னும் புகழ் பெற்ற பாடல்களை, கீர்த்தனைகளை இன்னிசை நிகழ்ச்சியில், பஜனைகளில் கேட்டிருப்பீர்கள் அல்லவா! இந்த புகழ் பெற்ற பாடலை எழுதியவர் யார் தெரியுமா? அவரைப் பற்றி நாம் தெரிந்து கொள்வோம். அவர் யாரோ அல்ல. அவர் தான் ஸ்ரீபாதராயர் (அ) ஸ்ரீபாதராஜர்.

இவருடைய இயற்பெயர் லக்ஷ்மி நாராயணா. இவருடைய பெற்றோர்கள் கிரியம்மா, சேஷகிரியாச்சாரியர். மைசூர் அருகில் உள்ள சென்னபட்டினம் இவரது ஊர். இவர் இளம் வயதிலேயே மிகவும் சுறுசுறுப்பு மிக்கவர். நன்கு பேசவும் பாடவும் தெரிந்தவர். மாடுகளை மேய்த்துக் கொண்டு தன் இளம் வயதில் நன்கு பாடி அனைவரையும் இனிமையாக மகிழச் செய்பவர்.

ஒருமுறை ஸ்வர்ணவர்ண தீர்த்தர் அந்த சிறுவனைக் கண்டார். அச்சிறுவனின் முகப் பொலிவையும் பேச்சு திறமையையும் கண்டு அவனைத் தன்னுடைய சிஷ்யனாக ஆக்கிக்கொண்டார். அந்தச் சிறுவனுக்கு உபநயனம் செய்து வைத்து, அதன் பிறகு அவரே சமஸ்க்ருதம், கன்னடம், திராவிட மொழிகளில் பயிற்சி கொடுத்து, பெரிய வித்வானாக தயார் செய்தார். வேதாந்த சாஸ்திர முறையையும் போதித்தார். த்வைத மத அறிவையும் கொடுத்து பெரிய வித்வானாக மாற்றினார். அவருடைய ஞானம், பக்தி இவைகளைப் பார்த்து தன்

தெலுங்கு மூலம் : திரு. சுஸ்வரம் நாகாராஜாசார்யுலு
தமிழாக்கம் : திருமதி ஆ. அருணா

பீடத்திற்கு சன்னியாஸ்ரமத்திற்கு "ஸ்ரீபாத ராயர்" என நாம கரணம் செய்து மடாதிபதியாக்கினார்.

அன்று முதல் லக்ஷ்மி நாராயணர் ஸ்ரீபாதராயராகி "சுதா வேதாம் தாதி" போன்ற கிரந்தங்களை மிக எளிதில் படிக்கும் விதத்தில் எழுதி, தான் வணங்கும் மூர்த்தியான ஸ்ரீரங்க விட்டல மூர்த்தியை பூஜித்துக் கொண்டு கீர்த்தனைகளைப் பாடி கர்நாடகாவில் ஹரி தாச சாகித்தியத்திற்கு ஏராளமான பேர் சேவை செய்திருந்தாலும், முன்பிருந்தவர்களுக் கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தார். பிரமரகீத, கோபிகீத, மத்வ நாமங்களால் எத்தனையோ ஞான, வைராக்கிய, பக்தி, கீர்த்தனைகளை பாடிக் கொண்டு வருங்காலத்தில் வரப்போகும் வாக்கேயகாரர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார்.

''ஸ்ரீமத்வீர நரசிம்ம ராஜ ''வபதே... ஸ்ரேயஸே'' என்னும் ஸ்லோகத்தில் சந்திரகிரியை ஆண்ட சாளுவ நரசிம்ம ராயருக்கு பிரம்மஹத்யா தோஷத்தை தம் தவ வலிமையால் போக்கி அந்த அரசனால் கௌரவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீபாதராயர் ஒரு முறை கோப்ர க்ஷேத்ரத்தில் "ஸ்ரீமந்ந்யா சுதா சுவாதமுனு" ஒரே மூச்சில் கங்கைப் ப்ரவாகம் போல் கம்பீரக் குரலில் கானம் செய்யும்போது அங்கேயே உள்ள உத்திராதி மட பீடாதிபதி ஸ்ரீரகுநாத தீர்த்தர் இவரை ஸ்ரீபாதராஜர் என்று புகழ்ந்தார். அன்றிலிருந்து ஸ்ரீபாதராயர் என்று அழைக்கப்பட்டார்.

இவர் எழுதிய கீர்த்தனைகளில் "பூஷணகே பூஷண" என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றது. நாக்கிற்கு நாராயண மந்திரம், கால்களுக்கு தீர்த்த யாத்திரை. கோவில்களுக்கு துளசி பிருந்தாவனம், செவிக்கு விஷ்ணு கதைகள். கைகளுக்குத் தானம், மானிடர்களுக்கு மானம், முனிகளுக்கு மௌனம், கண்களுக்கு ரங்கனின் உருவம், தலைக்கு நமஸ்காரம், கழுத்திற்கு துளசி மாலை அழகு என்று கூறுவர். "ஹரே வெங்கட சைல வல்லப பாரேயசேகு என்ன" என்னும் ஸ்ரீநிவாசனின் மீது இவர் எழுதிய பாட்டு மிகவும் பிரசித்தமாகியது. இவருடைய பிருந்தாவனம் கோலார் மாவட்டம் "முளபாகி" லில் அமைந்து உள்ளது.


## சித்திரக்கதை


# கடப்பாரை செய்த காயம்


கதை : திரு. ம. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஓ.சுரேஷ்
சித்திரம் : திரு. கே. துவாரகநாத்

திருவேங்கடமுடையான் புஷ்பப்பிரியன். ஆனால், மலைமேல் தேவையானளவு மலர் கிடைப்பதில்லை. அந்த பற்றாக்குறையை போக்க இராமாநுஜர் ஆலோசித்து தம் சீடர்களை அழைத்தார்





அடியேன் செல்கிறேன்!
நீர் ஒருவனே ஆண்பிள்ளை!!
அநந்தாழ்வான் நிறை மாத கர்ப்பவதியான தன் மனைவியுடன் திருமலையை அடைந் தார். முதலில் குளத்தை வெட்டுவதை ஆரம்பித் தார். கணவன் மண்ணை தோண்ட, மனைவி அம் மண்ணினை தட்டினால் எடுத்துச் சென்று தூரத்தில் கொட்டினாள். இவர்க ளின் சேவையை கண் ணுற்ற ஸ்வாமி, சிறுவன் வடிவில் அங்கு வந்து...
ஐயா! நானும் மண்ணை சுமக்கிறேன்
எவருடைய உதவியும் எமக்கு வேண்டாம்... செல்...
அம்மா! தட்டினை கொடுங்கள். நான் சுமக்கின்றேன்...
சரி... இந்தத் தட்டினை கொண்டு செல்...



தன் பேச்சினையும் கேட்காமல் மண்ணை சுமந்துச் சென்று கொட்டும் சிறுவனை கண்ணுற்ற அநந்தாழ்வான் அரிசினம் (கோபம்) கொண்டு...
எமக்கு உம்முடைய உதவி தேவையில்லை என்று சொன்னேனல்லவா... இங்கிருந்து செல்கிறாயா...! இல்லையா...!!
அடிப்பாயா என்ன?
என்று கூறி... சிறுவன் ஆனந்த நிலையத்தை நோக்கி ஓடினான்
ஓடாதே! நில் என கோபத் துடன் கடப்பாரையை வீசினார் அநந்தன்
தாத்தா! நான் நிற்க மாட்டேன்... நிற்க மாட்டேன்!
கடப்பாரை சிறுவனின் மோவாய் மீது பட்டு இரத்தம் சிந்தியது
ஐயோ ! வலிக்குதே... வலிக்குதே...
என்று கூறியபடியே சிறுவனும் கோயிலுக்குள் சென்று மறைந்தான். அவன் பின்னாலே அநந்தாழ்வானும் சென்றார். ஆனால் கோயிலுக்குள் அச்சிறுவனைக் காணவில்லை... எதிரில் இரத்த காயத்துடன் ஸ்வாமி திருக்காட்சியளித்தார்
ஸ்வாமி! தங்களையா நான் அடித்தது? பாவி நான்




திருவேங்கடமுடையானின் மற்றுமொரு திவ்விய லீலையை அடுத்த இதழில் தரிசிப்போம்.

முற்றும்.



நீதிக்கதைகள்

# ஈகை




– திரு. சத்யதாரா, சென்னை.

*"ஆற்றுப் பெருக்கற்றடி சுடுமந்நாளுமவ்வா(று)*
*ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு*
*நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்*
*இல்லையென மாட்டார் இசைந்து*

**நீருடன் பிரவாகமாக ஓடிய ஆறு முற்றும் வறண்டு விடும் காலங்களில் மண்ணின் கீழே உள்ள ஊற்று நீரை சிறிது சிறிதாக வழங்கி உலகத்தாரின் தாகத்தை தீர்த்திடும். அது போலவே நல்ல பண்புள்ள குடியில் பிறந்தவர்கள் தாங்கள் எவ்வளவு வறுமையில் வாடினாலும், தம்மால் இயன்ற உதவியை மற்றவர்க்கு செவ்வனே செய்வார்கள் – என்பது இப்பாடலின் கருத்து.**

**மஹாபாரதத்தில் மனதைத் தொடும் ஒரு சம்பவம். பஞ்ச பாண்டவர்களில் மூத்தவனான யுதிஷ்டிரன் ஒரு சமயம், மாபெரும் அஸ்வமேத யாகம் செய்தான். மன்னர்களையும், சான்றோர்களையும் அழைத்து, விருந்துக்கு ஏற்பாடு செய்தான். விருந்தின் தரம், விண்ணைத் தொட்டவண்ணம் இருந்தது. சான்றோர் பலரும் உண்டு முடித்தனர். அவர்களின் எச்சில் இலைகள் அப்புறப்படுத்தப்பட்டன.**

**அப்பொழுது மண்டபத்தின் உள்ளே வேகமாக அணில் ஒன்று நுழைந்தது. அதன் உடலில் ஒரு பக்கம் பொன் போன்று காட்சியளித்தது. அங்கிருந்தோர் ஆச்சர்யத்துடன் அதனைக் கண்டனர். அங்கிருந்த எச்சில் இலைகளில் அனைத்திலும் அங்கும் இங்குமாக உருண்டது. தன்னுடைய உடலை புரட்டியது. பின்பு அமைதியாக இருந்தது. மன்னன் யுதிஷ்டிரன்,**

இதன் காரணம் என்னவென்று அங்கிருந்த சான்றோர்களிடம் வினவினான். அப்போது அந்த அணில் அசரீரி போல பேசத் துவங்கியது.

மன்ன! "உனது நாட்டின் எல்லையில் ஓர் அந்தணர் அன்றாடம் பிகைஷயாக கிடைக்கும் அன்னத்தை குடும்பத்தாருடன் உண்டு வாழ்ந்து வந்தான். ஆனால் ஒருநாள் அரிசிக்கு பதில் அரிசி மாவு கிடைத்தது. அதை பக்குவப்படுத்தி குடும்பத்தோடு சாப்பிடுவதற்காக சந்தோஷமாக அமர்ந்தனர்.

அச்சமயம் ஒரு அதிதி பிச்சை இடுங்கள் எனக் கேட்க, உடனே உணவருந்த அமர்ந்த அந்தணர் ஒரு நொடிப்பொழுதும் யோசிக்காமல் தன் பங்கினையும், குடும்பத்தார் அவரவர் பங்கினையும் அளித்தனர். பிச்சை கேட்டு வந்த பிராமணர் அதை பரபரப்பாக உண்டார். அதிதியின் பசி அடங்கியது. அவரது மனம் குளிர்ந்தது. மாவுத்துகள்கள் வாயிலில் கீழே சிந்தி இருந்தன. என் உடலில் அந்த மாவுத்துகள்கள் பட்ட ஒரு பாகம் தங்கமாக மாறியது. அது போலவே... இங்கும் ... மாபெரும் மன்னன் கொடுத்த விருந்தில் சிந்திய உணவுத்துகள்களில் புரண்டால், மறுபக்கம் தங்கமாக ஆகாதா? என்ற ஆசையில் புரண்டேன். ஆனால் பலனில்லை.

பசியுடன் துடித்துக் கொண்டு இருந்த அந்தணரின் குடும்பமே... மகிழ்ச்சியுடன் தங்களுக்கு கிடைத்த உணவை... தானமாக வழங்கியது. இங்கு மாபெரும் யாகம் நிகழ்த்திய மன்னன் அளித்த விருந்தில் கிடைக்காத பாக்கியம்... ஏழையின் குடிசை வாயினில் கிடைத்தது. எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் கொடிய வறுமையிலும் மனமகிழ்ச்சியுடன், கொடுக்கப்பட்ட தானம்... எவ்வளவு உயர்ந்தது... எத்துணை சிறப்பானது என்பதனை அறிவாய்" என்று கூறி விட்டு அங்கிருந்து சென்றது.

குழந்தைகளே...! அன்புச் செல்வங்களே...! பலன் எதுவும் கருதாமல், மன மகிழ்ச்சியுடன் செய்யப்படும் ஈகையே சிறந்தது. நாமும் உதவுவோம்... உயர்வோம்.



# சிறந்த சிறுவன்

| | | |
|---|---|---|
| பெயர் | - | இ.சாயி யசஸ்வி |
| வகுப்பு | - | 5ஆம் வகுப்பு |
| பிறந்த தேதி | - | 18-11-2009 |
| தந்தை பெயர் | - | திரு. இ.வெங்கட ரமேஷ், இந்திய இராணுவம் |
| தாய் பெயர் | - | திருமதி டி.ஸ்ரீதேவி, தி.தி.தே. |
| பள்ளி | - | மேக்மை பேபி ஜீனியஸ், திருப்பதி. |

## திறமைக்கான பரிசுகள் :

- வேமன சதக ரத்னா - 3ம் வகுப்பு
- 108 யோகாஸன ப்ரவீணா - 4ஆம் வகுப்பு
- 100 வாய்ப்பாடு க்ஷணிக கணிகோத்தம - 4ஆம் வகுப்பு
- 100 க்கு மேல் ஒரிகாமி வண்டர் கிட் - 4ஆம் வகுப்பு
- டான்க்ராம் வண்டர் கிட் - 4ஆம் வகுப்பு

## ஜீனியஸ் புக் ஆப் ரிகார்ர்ட்ஸ் :

- 100 வேமனா பாடல்கள் - 100 பேர்-25 நிமிடம் - 01-06-2016
- 100 வேமனா பாடல்கள் - 200 பேர்-25 நிமிடம் - 05-06-2017
- 100 வேமனா பாடல்கள் - 300 பேர்-25 நிமிடம் - 03-06-2018

## வண்டர் புக் ஆப் ரிகார்ர்ட்ஸ் :

- 100 வேமனா பாடல்கள் - 300 பேர்-25 நிமிடம்-03-06-2018
- 1. ரூபிக்யூப் 2. ஜகிகிங்க் பால்ஸ் 3. மைக்ரோ ஆர்ட் 4. ட்ராயிங் 5. ஸ்கேடிங் 6. பகவத்கீதை 7. விஷ்ணு சகஸ்ர நாமம் 8. கோவிந்த நாமங்கள் 9. லிங்காஷ்டகம் 10. ப்ரீத்லேஸ்ஸாங்க்

புதிர்

# "வினா–விடை"

**நம் இந்து மத கலச்சாரத்தின் வாரிசுகளான சிறார்களுக்கு புராணம், இதிகாசம் மற்றும் காவியங்கள் குறித்து பொது அறிவினை வளர்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் புதிர் "வினா–விடை" பகுதியை வழங்குகின்றோம்.**

1. புராணங்களை எழுதியவர் யார்?

அ) வியாசமுனி    ஆ) சுகமுனி

இ) விச்வாமித்ர முனி    ஈ) நாரத முனி

2. மிகப் பெரிய காவியம் எது?

அ) பெரிய புராணம்    ஆ) பகவத் கீதை

இ) மகா பாரதம்    ஈ) திவ்ய பிரபந்தம்

3. இராமாயணம் நடைபெற்ற யுகம் எது?

அ) கலியுகம்    ஆ) திரேதாயுகம்

இ) துவாபர யுகம்    ஈ) கிருதயுகம்

4. கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட இடம் எது?

அ) ஸ்ரீரங்கம்    ஆ) மதுரை

இ) திருச்சி    ஈ) தஞ்சாவூர்

5. சைவராக இருந்து வைணவராகிய ஆழ்வார் யார்?

அ) பெரியாழ்வார்    ஆ) குலசேகரர்

இ) திருப்பாணர்    ஈ) திருமழிசையாழ்வார்

6) இந்து ஜோதிடக் கலையின் தந்தை யார்?

அ) வியாசர்    ஆ)நாரதர்


இ) வராக மிஷ்ரர்    ஈ) கிருஷ்ணர்

1)அ, 2)இ, 3)ஆ, 4)அ, 5)ஈ, 6)இ

திரு. டி. பூபதிராஜ், காஞ்சிபுரம்.

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...



பிரம்மோத்ஸவத்தில் சிறார் கலைஞர்கள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-03-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742.
Postal Regd.No.TRP/12- 2018-2020, Licensed to post without prepayment
No.PMGK/RNP/WPP-04/2018-2020



ஸ்ரீராமபக்தன் !
அஞ்சனை மைந்தன்!!